# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண். 13 / 2016**

திரு. கு செல்லப்பன்,
த/பெ குழந்தை வேளாளர்,
மட்டங்கால் – அஞ்சல்,
கந்தர்வகோட்டை வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் . . . .மேல்முறையீட்டாளர்
(திரு. கோவிந்தசாமி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை. . . . . . . எதிர்மனுதாரர்
(திரு. D. அசோக்குமார், செயற்பொறியாளர்/
புதுக்கோட்டை)

**கேட்புரை : 5.5.2016**
**ஆணை நாள் : 11.5.2016**

1. திரு. கு. செல்லப்பன், மட்டங்கால் அவர்களின் 17.2.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.13/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீதான கேட்புரை 5.5.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் அவரின் விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமான வழக்கில் நீதிமன்றம் மின்சார வாரியத்தின் மீது தவறு என்று தீர்ப்பு வழங்கியுள்ளதால் அவரது வங்கிக்கடன் வட்டியுடன் சேர்த்து ரூ.800000/– வழக்கு செலவு மற்றும் மின்வாரியத்திற்கு கட்டிய தொகை ஆகியவைகளுக்கு ரூ.200000/– ஆக மொத்தம் ரூ.10,00,000/– நஷ்ட ஈட்டுடன் வேறு வகையில் மின்இணைப்பையும் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளர், மட்டங்கால் கிராம புல எண்.9–1ல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு சுயநதி திட்டம் ரூ.50000/–ன் கீழ் விவசாய மின்இணைப்பு கோரி விண்ணப்பம் செய்துள்ளார்.

2.2 அந்த விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்க மதீப்பீடு செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ.1,19,771/– மற்றும் ரூ.1880/– ஆகியவற்றையும் 31.12.2008 அன்று செலுத்தியுள்ளார்.

2.3 மின்வாரியம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கிணங்க மின்பாதை அமைத்த பின்பு திரு. அய்யாதுரை அவர்கள் தன்னுடைய நிலத்தின் வழியாக மின்பாதை அமைத்தது தவறு என்று ஆட்சேபனை செய்து புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (வழக்கு எண்.148/2009) வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் மின்கம்பம் மற்றும் மின்கம்பங்களையும் அகற்றுமாறு நீதிமன்றம் 23.10.2013 அன்று தீர்வு வழங்கியது.

2.4 மேற்கண்ட தீர்வை எதிர்த்து திரு. செல்லப்பன் அவர்கள் புதுக்கோட்டை முதன்மை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த வழக்கு எண்.OS No.10/2014ன் வழக்கு தீர்ப்புரை 25.11.2014ல் வழங்கப்பட்டது. அதன்படி புதுக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்வு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

2.5 மேற்கண்ட நிலையில் மேல்முறையீட்டாளர் புதுக்கோட்டை மின்சார பகிர்மான வட்டத்தின் குறைதீர்க்கும் மன்றத்திற்கு ஈஷ்டஈடு ரூ.10,00,000/– தரவேண்டும் என்றும், மின்னிணைப்பு மாற்று பாதையில் வழங்க வேண்டும் என்று 28.11.2015ல் மனு செய்துள்ளார். ஆனால், மன்றம் தன்னுடைய தீர்வை மனு பெறப்பட்டு 50 நாட்கள் ஆகியும் தெரிவிக்கவில்லை என்பதால் தன்னுடைய மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

2.6 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 17(4)(அ)ன் படி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு 50 நாட்களுக்குள் பதில் எதுவும் வரவில்லை என்றால் மின்குறைதீர்ப்பாளர் அந்த மனுவை ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளதால் மேற்கண்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.13/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 மனுதாரர் மட்டங்கால் வட்டம், மட்டங்கால் கிராமம் புல எண்.9–1 உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு விவசாயம் செய்வதற்காக (சுயநிதிதிட்டம் 50,000) சுயநிதி திட்டத்தின் கீழ் 15 HP மின்சாரம் வழங்கவேண்டி பதிவு எண்.368/16.12.2004 அன்று விண்ணப்பித்துள்ளார்.

3.2 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடிதத்தின் அடிப்படையில் 30.12.2006 அன்று ரூ.500/– செலுத்தினார். பின்பு மின்சார வாரியத்தால் மின்இணைப்பு வழங்க மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.1,19,700/– கட்ட வாரியத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் 31.12.2008 அன்று மதிப்பீட்டு தொகை ரூ.1,19,700/– மற்றும் கூடுதல் மதிப்புத்தொகை ரூ.1880/– யையும் செலுத்தியுள்ளார்.

3.3 இதன் அடிப்படையில் மின்சார வாரியத்தால் 10 மின்கம்பங்கள் ஊன்றப்பட்டு மின்கம்பியும் 19.7.2009 அன்று இழுக்கப்பட்டு வேலை முடிந்தது. 20.7.2009 அன்று அவர்கள் ஊரைச் சேர்ந்த அய்யாத்துரை த/பெ சாமியய்யா என்பவர் அவருடைய நிலத்தின் வழியாக மின்கம்பங்கள் நடப்பட்டதற்கு மறுப்பு தெரிவித்து வாரியத்திற்கு எதிராக நடைமுறைக்கு மாறாக வழக்கு தொடுத்தார்.

3.4 இந்த வழக்கானது புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (அசல் வழக்கு எண்.148/2009) நடந்தது. அவரும் மூன்றாம் தரப்பினராக இணைந்து வழக்கு நடத்தினார். இந்த வழக்கின் தீர்ப்புரையானது 23.10.2013 அன்று வழங்கப்பட்டது. அதன்படி மின்வாரியம் மின் கம்பங்களையும் மின்கம்பிகளையும் அகற்றுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்புரையினால் மின்வாரியத்திற்கு எந்த இழப்பும் இல்லை. உண்மையில் அவரும் அவரது குடும்பமும் பொருளாதார ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டார்கள்.

3.5 எனவே, அவரும் புதுக்கோட்டை முதன்மை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த வழக்கு எண்.A.S.No.10/2014 ஆகும்.இந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்புரையானது 25.11.2014 அன்று வழங்கப்பட்டது. அதன்படி உரிமையியல் நீதிமன்றத்தில் மின்சார வாரியத்திற்கெதிராக வழங்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது. இதன் பிறகு மின்சார வாரியம் இதன் அடிப்படையில் எந்த கவனமும் செலுத்தவில்லை. உதவி மின்பொறியாளர், கந்தர்வக்கோட்டை, வடக்கு அவர்களிடம் கேட்டபோது அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என்று கூறிவிட்டனர்.

3.6 16.12.2004க்கு முன்பு ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு ரூ.2,00,000 மற்றும் 30.12.2006ல் மின்சார வாரியத்திற்கு ரூ.500/– மற்றும் மதிப்பீட்டு தொகை 31.12.2008 அன்று ரூ.1,19,771/– மற்றும் கூடுதல் தொகை ரூ.1880/– ஆழ்குழாய் கிணற்றுக்கான நிர்மூழ்கி மோட்டார் டெலிவரி குழாய்க்காக மற்றும் மின்சாதனங்களுக்காக கந்தர்வக்கோட்டை central Bank of indiaல் ரூ.3,30,000 கடன் பெற்று செலவு செய்துள்ளார். அந்த வங்கி கடனானது அசல் மற்றும் வட்டி இணைந்து ரூ.8,00,000 ஆகிவிட்டது. வங்கி அடமான நிலத்தை ஏலம் விடும் நிலைக்கு வந்துவிட்டது. இதனால் அவரும் அவரது குடும்பமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்.

3.7 மேலும் அவரது ஆழ்குழாய் கிணற்றை சுற்றியுள்ள 4 1/2 ஏக்கர் நிலமும் கடந்த 10 ஆண்டுகளாக தரிசுநிலமாக கிடக்கிறது. அவருக்கு மற்ற வருவாய் ஏதும் இல்லை. குடும்பம்

நீதிமன்றத்திற்கு செலவு செய்து மேலும் கடனாளி ஆகிவிட்டது. அவர் மின்சார வாரியம் கொடுத்த ஒப்புதல் கடிதத்தின் பேரில்தான் இவ்வளவு செலவு செய்துள்ளார்.

3.8 நீதிமன்றம் மின்சார வாரியத்தின் மீது தவறு என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. எனவே அவரது வங்கி கடன் வட்டியுடன் சேர்த்து 8,00,000 மற்றும் 2,00,000 ஆக மொத்தம் ரூ.10,00,000 நஷ்ட ஈட்டுடன் வேறுவகையில் மின் இணைப்பினை வழங்கினால் மட்டுமே நிவர்த்தியாகும். அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கும் மின் இணைப்பிற்கும் ஆவணம் செய்யாவிடில் அவரது குடும்பமும் அவரும் தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்துள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 மனுதாரர் திரு. கு. செல்லப்பன், த/பெ குழந்தைவேளாளர், கந்தர்வக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை தாலுகா மட்டங்கால் கிராமம் புல எண்.9–1 க்கு விவசாய மின்இணைப்ப வேண்டி பதிவு எண்.368 நாள் 16.12.2004 அன்று மின்பளு 15க்கு பதிவு செய்துள்ளார்.

4.2 அதனை தொடர்ந்து விண்ணப்பதாரர் சுயநிதி 50,000 திட்டத்தில் விருப்ப மனு அளித்ததின் அடிப்படையில் அவருக்கு 1.12.2006 அன்று ரூ.500 செலுத்த அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு மனுதாரர் 30.12.2006 அன்று ரூ.500 செலுத்தியுள்ளார். பின்னர் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மதிப்பீட்டுத்தொகையாக ரூ.1,19,770/– செலுத்துவதற்கு 17.12.2008 அன்று கடிதம் வழங்கப்பட்டு மனுதாரர் 31.12.2008 அன்று முழுத்தொகையையும் செலுத்தி தனது தயார் நிலையை பதிவு செய்துள்ளார்.

4.3 அதனை தொடர்ந்து விரிவாக்கப் பணிகள் செய்யப்பட்டு மின்இணைப்பு கொடுக்கும் நிலையில் திரு. அய்யாத்துரை த/பெ சாமியய்யா அவர்களால் தன் நிலத்தின் வழியாக மின்கம்பங்கள் நடப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்து புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (அசல் எண்.148/2009) வழக்கு தொடர்ந்தார். அதில் மின்வாரியத்திற்கு எதிராக மின்கம்பங்களை அகற்றுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது அத்தீர்ப்பினை எதிர்த்து திரு.

செல்லப்பன் அவர்கள் புதுக்கோட்டை முதன்மை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். (வழக்கு எண்.10/2014) முதன்மை நீதிமன்றம் உரிமையியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தது.

4.4 தற்போது மனுதாரர் திரு. கு. செல்லப்பன், த/பெ குழந்தைவேளாளர் அவர்களுக்கு மாற்றுப் பாதையில் மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்க மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு மின்இணைப்ப வழங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தயாராக உள்ளது. மனுதாரர் மின் இணைப்பு பெற தயாரானவுடன் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறார்.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 5.5.2016 அன்று கேட்புரை மின்குறைதீர்ப்பாளரால் நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளரின் சார்பில் அவரின் மகன் திரு. கோவிந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. D. அசோக் குமார் செயற்பொறியாளர்/புதுக்கோட்டை அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

6.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய விவசாய மின்இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

6.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி சுயநிதி திட்டத்தின் கீழ் மின்பாதை அமைக்க மதிப்பீடு தொகையை செலுத்திய பின்பு அதன்படி மின்வாரியம் மின்பாதையை அமைத்த பின்பு திரு. அய்யாத்துரை அவர்களின் அவருடைய நிலத்தில் அமைத்துள்ள மின்பாதை அகற்றவேண்டும்

என்று ஆட்சேபனை செய்து வழக்கு தொடர்ந்ததால் மின்இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது என்பதை தெரிவித்து வழக்கின் தீர்வில் நீதிமன்றம் மின்சார வாரியத்தின் மீது தவறு என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டாளரும் ரூ.10,00,000/– நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரினார். மேலும், மேல்முறையீட்டாளர் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா–வில் பெறப்பட்ட கடனுக்கு தற்பொழுது ரூ.6,15,025/– கட்டவேண்டியது உள்ளது என்றும் வாதிட்டு அதற்கான statement of accountஐ சமர்ப்பித்தார். மேற்கண்ட மின்இணைப்பு பெறுவதற்கு காலதாமதம் ஆனதால் விவசாயம் செய்யமுடியாமல் கடனையும் செலுத்தமுடியவில்லை என்று வாதிட்டார். எனவே, அந்த நஷ்டங்கள், வாரியத்தால் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று வாதிட்டார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட செயற்பொறியாளர், மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின்இணைப்பு 31.3.2016 மாற்றுப்பாதையின் வழியாக மின்பாதை அமைத்து மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் அந்த மின்இணைப்பின் எண்.124–022–340 என்றும் தெரிவித்தார்.

6.4 மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு தாமதம் ஆனதற்கு காரணம் அனுமதிக்கப்பட்ட மின்பாதையை அமைத்த பின்பு தன்னுடைய நிலத்தின் வழியாக மின்பாதை அமைத்தது தவறு என்றும் அதை அகற்ற வேண்டும் என்று திரு. அய்யாத்துரை அவர்கள் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் புதுக்கோட்டை முதன்மை நீதிமன்றத்திலும் ஆட்சேபனை செய்த திரு.அய்யாத்துரை அவர்களுக்கு சாதகமாக தீர்வு பெறப்பட்டது என்பதால் தான் மின்னிணைப்பு வழங்க முடியவில்லை என்று தெரிவித்து, எனவே, மேல்முறையீட்டாளர் கோரிய நஷ்ட ஈடு வழங்க முடியாது என்று வாதாடினார்.

6.5 இந்த வழக்கில் கீழ்கண்ட கோரிக்கைகள் மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(i) அவருக்கு மாற்றுப்பாதையில் விவசாய மின்இணைப்பு வழங்க உத்தரவு இடவேண்டும் ?

(ii) அவரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணபத்திற்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு அமைக்கப்பட்ட மின்பாதை அகற்றவேண்டும் என்ற வழக்கில் மின்சாரவாரியத்தின் மீது தவறு என்று நீதிமன்றம் தீர்வு வழங்கியுள்ளதால் ரூ.10,00,000/– நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

6.6 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு 31.3.2016 அன்று அவர் கோரிய விவசாய மின்இணைப்பு மாற்றுப்பாதை வழியாக மின்பாதை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரும் தனக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட முதல் கோரிக்கை ஏற்கெனவே நிறைவேறி விட்டது என்பதால் வேறு தீர்வு எதுவும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

6.7 இரண்டாவது கோரிக்கை மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பிற்காக போடப்பட்ட மின்பாதையை அகற்ற வேண்டும என்ற வழக்கில் நீதிமன்றம் மின்வாரியத்தின் மீது தவறு என்று தீர்வு வழங்கியுள்ளதால் அவரின் வங்கிக்கடன் வட்டியுடன் சேர்த்து ரூ.8,00,000/– மற்றும் வழக்கு செலவு மின்வாரியத்திற்கு கட்டிய தொகை ஆகிவைகளுக்கு ரூ.2,00,000/– ஆக மொத்தம் ரூ.10,00,000/– நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

6.8 எதிர்மனுதாரர் வாரியம், அவரின் விண்ணபத்தின் அடிப்படையில் மதிப்பீடு அனுமதித்து மின்பாதையை அமைத்துவிட்டது. ஆனால், மின்பாதை செல்லும் நிலத்தின் சொந்தக்காரர் அவ்வாறு அமைத்த மின்பாதையை அகற்ற வேண்டும் என்று வழக்கு தொடர்ந்து அந்த வழக்கில் அவருக்கு ஆதரவாக தீர்வும் பெற்றுள்ளார் என்பதால் மின்இணைப்பு வழங்க தாமதம் ஆகியுள்ளது. எனவே, நஷ்டஈடு வழங்க வேண்டியது இல்லை என்று வாதிட்டுள்ளார்.

6.9 இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. xxxxx xxx xxxx xxxx*
*xxxxx xxx xxxx xxxx*
***(11)** குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**6.10** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**6.11** எனவே, ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

**6.12** இந்த வழக்கில் கோரப்பட்டுள்ள நஷ்டஈடான ரூ.10,00,000/– என்பது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**7. <u>முடிவுரை</u>**

**7.1** மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின் இணைப்பு **31.3.2016** அன்று வழங்கப்பட்டு விட்டதால் அவரின் கோரிக்கையான அவரின் விண்ணப்பத்திற்கு விவசாய மின்இணைப்பை மாற்றுபாதையில் வழங்க வேண்டும் என்பது நிறைவேறிவிட்டது என்பதால் மேற்கண்ட கோரிக்கைக்கு வேறு தீர்வு எதுவும் தேவையில்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

7.2 பத்தி எண்.6.12 உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

7.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.13/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. கு செல்லப்பன்,
த/பெ குழந்தை வேளாளர்,
மட்டங்கால் – அஞ்சல்,
கந்தர்வகோட்டை வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை.

3 தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **மின்குறைதீர்ப்பாளர் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்
சென்னை – 600 008.